| | | |
|---|---|---|
| சாட்சி : DW1<br>கோவிந்தராஜன், த/பெ பரதேசி | அ.வ.எண்.306/2017 | 17.03.2026 |

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) நான் பி.இ சிவில் படித்துள்ளேன். நான் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் நிர்வாக பொறியாளராக பணிபுரிந்து 29.02.2008 ல் ஓய்வு பெற்றுள்ளேன். நான் தற்போது சென்னையில் தான் வசித்து வருகிறேன், மணக்காலில் சொந்த வீடு உள்ளது. நான் பணிபுரியும் போதும், தற்போதும் சென்னையில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். இவ்வழக்கு சம்மந்தமாக சங்கதிகள் எனக்கு நன்கு தெரியும். அதுபோல் எதிர்வழக்குரையில் உள்ள சங்கதிகளும் எனக்கு தெரியும். எனது பிரமாண வாக்கு மூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். எதிர்வழக்குரையும் படித்து பார்த்து தெரிந்து கொண்டேன். மேற்படி எதிர்வழக்குரை, எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் நான் எனது வழக்கறிஞரிடம் சொல்லி தயார் செய்யப்பட்டவை என்றாலும் அதன் முழு விவரங்கள் எனக்கு தெரியும் என்றாலும் சரிதான்.

2) எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளது போல் 1994 ம் ஆண்டிலிருந்து தாவா சொத்தை நான் அனுபவித்து வருவதை காட்டக்கூடிய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். வாதி எனக்கு உறவினர் என்றால் சரிதான். பிரதிவாதிகள் கலாவதி, நிவேதா, பிரித்தா, வினிதா ஆகியோர் எனது மனைவி மற்றும் மகள்கள் என்றால் சரிதான். வாதி ராதிகா முதல் வழக்கை தாக்கல் செய்த பின்னர் தான் நாங்கள் மற்றொரு வழக்கான அ.வ.எண்.339/2017 என்ற வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பிரமாண வாக்குமூலத்தில் 3 வது பத்தியில் உள்ள சங்கதிகள் உண்மை தான். மேற்படி சொத்தை காலிங்கன்,

1956 ம் வருடத்திலிருந்து சுவாதீனத்தில் வைத்து ஆண்டு அனுபவித்து வந்தார், அவரது மறைவிற்கு பின்னர் அவரது மனைவி தாமரை அவரது மகன்கள் மற்றும் மகளான 2 முதல் 4 பிரதிவாதிகள் ராஜேந்திரன், கலையரசி, ரவிக்குமார் ஆகியோர் ஆண்டு அனுபவம் செய்துவந்தார்கள் என்றால் சரிதான்.

3) எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 4 ல் கண்டுள்ள விவரங்கள் சரிதான். இவ்வழக்கு தொடர்பான நில பிரச்சனைக்கு முன்பு வரை நான், எனது தம்பி லால்பகதூர், தாமரை, வாதி ராதிகா ஆகியோர் ஒற்றுமையாக தான் இருந்தோம் என்றால் சரிதான். நான் படித்து நல்ல வேலையில் இருந்ததால் சொத்துக்கள் தொடர்பான அனைத்து ஆவணங்கள் சம்மந்தப்பட்ட விவரங்களை செய்வேன் என்றால் சரிதான். அதனால் சொத்துக்கள் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் என் வசம் தான் இருந்தது என்றால் சரிதான். அது போல் தாவா சொத்து தொடர்புடைய ஆவணங்களும் என் வசம் தான் இருந்தது என்றால் சரிதான்.

4) காலிங்கன் எனது அத்தை தாமரையின் கணவர் ஆவார். அவர் இறந்து சுமார் 25 – 30 வருடங்கள் இருக்கும். காலிங்கனும் சேர்ந்து மோசடி ஆவணம் தயார் செய்ததாக தான் பத்தி 5 ல் உள்ளது என்றால் அவ்வாறு தான் உள்ளது. மேற்படி ஆவணம் ஏற்பட்ட போது காலிங்கன் உயிருடன் இல்லை, அவரது வாரிசுகள் தான் மேற்படி ஆவணத்தை மோசடியாக தயார் செய்துள்ளார்கள். அதே போல் பத்தி 6 ல் 1 ம் பிரதிவாதி ராதிகா மீதும், காலிங்கன் மற்றும் அவரது மகன்கள், மகள்கள் ஆகியோர் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பத்தி 7 ல் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மை தான்.

5) எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளது போல் தாவா சொத்தை வாங்கிய பின்னர் பட்டா மாற்றம் செய்ய நான் எந்த நடவடிக்கையும் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து சம்மந்தமாக எனது பெயரில் உள்ள வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 9ல் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மை என்றால் சரிதான். வாதி ராதிகா, வழக்கு சொத்தை பொறுத்து தங்களது அனுபவ, சுவாதீனத்தை உடைமையில் வைத்து அனுபவம் செய்துவருவதை 1ம் பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, முகவர்களோ வழக்கு சொத்தை ஆக்கிரமித்து வாதியின் சுவாதீனத்தை அகற்றியோ அல்லது வேறு எவ்வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு இவ்வழக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது அதனால் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வாதி ராதிகா தான் தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல.

**Signed,**
கோவிந்தராஜன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார்

PRAGATHEESHWARAN SUBRAMANIAN
Digitally signed by PRAGATHEESHWARAN SUBRAMANIAN

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
இலால்குடி.